**03.10.2023.**

**HMOP. No. 83/ 20 23 ம.சா. 1 ராமநாதன் த/பெ.மாணிக்கம்**

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

எனக்கு சுந்தர் என்ற சகோதரரும், கவிதா என்ற சகோதரியும் உள்ளார்கள் என்றால் சரிதான். இவர்கள் இருவரும் மூத்தோர் என்றால் சரிதான். என் திருமணம் முடிந்து ஒருவாரகாலத்தில் என் அண்ணனின் திருமணம் நடந்தது என்றால் நான்கு நாட்களில் நடந்தது. என் சகோதரரின் மனைவி பெயர் சுகன்யா என்றால் சரிதான், அவர் விவாகரத்துப் பெற்றுக்கொண்டு வேறு திருமணம் செய்து கொண்டார். சுகன்யா நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெற்றுக்கொண்டாரா என்றால் சென்னை நீதிமன்றம் மூலம் பெற்றுக்கொண்டார். என் அண்ணன் மிகவும் குடித்துவிட்டு கொடுமைப்படுத்துவதாக பொய் சொல்லி விவாகரத்து பெற்றுள்ளார். என் அண்ணன் அந்த வழக்கை எதிர்த்து நடத்தினார். நான் M.Sc. படித்துள்ளேன். என் திருமணத்திற்கு 11/2 ஆண்டுகளுக்கு முன்பே என் சகோதரிக்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். என் சகோதரிக்கு அது 3வது திருமண என்றால் இல்லை, அது 2வது திருமணம். என் சகோதரிக்கு ஒரு மகன் உள்ளார் என்றால் சரிதான். என் சகோதரி அவர் மகன் என்னுடன் எங்கள் வீட்டில் உள்ளார்களா என்றால் இல்லை, அவர்கள் வீட்டில் உள்ளார்கள். என் சகோதரி கோட்டையூர் வேலங்குடியில் குடியிருந்து வருகிறார். என் மைத்துனர் பெயர் பாலாஜி. என் சகோதரி தற்போது அவருடன் இல்லை, அவரின் கட்டுப்பாட்டில் தனியாக உள்ளார். என் சகோதரி என் மைத்துனரின் வீட்டில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். என் சகோதரி குடியிருப்பதாக சொல்லும் வீட்டின் தெரு, கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் என் சகோதரி வீட்டிற்கு சென்றதில்லை. என் சகோதரி இன்றைய தேதி வரை என்னுடம், என் பெற்றோருடனும் எங்கள் வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை. நானும், எனது சகோதரரும் எங்கள் மனைவியை பிரிந்ததற்கான காரணம் என் சகோதரி என்றால் இல்லை. என் சகோதரியின் துர்போதனை காரணமாக தான் நான் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், என் பெற்றோரும் ஆரம்பத்தில் எதிர்மனுதாரரை நல்ல முறையில் பாசத்துடனும் நடத்தி வந்தோம், பின்னிட்டு சகோதரியின் துர்போதனை காரணமாகதான் எதிர்மனுதாரரை கொடுமைப்படுத்த ஆரம்பித்தோம் என்றால் இல்லை. என் சகோதரியின் துர்போதனை காரணமாகத்தான் ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பினை பொய்யான, அவதூரான சங்கதிகளை சொல்லி அனுப்பியுள்ளேன் என்றால் இல்லை.

**வேண்டுகொளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**